1969 மார்ச் 6]

கிறது என்பது உண்மை. ஐயாயிரம் டன் செங்கல்பட்டுக்கு ஒதுக்கிவிட்டு, பாதியை எடுத்துப்போய் விட்டார்களே என்பது சரியானது அல்ல. மதுராந்தகம், செங்கல்பட்டு போன்ற இடங்களில் ரைஸ் மில் இருப்பதால் தான் அங்கே அரைத்து எடுத்துவர ஒதுக்குகிறோம். அங்கே ஒதுக்கியது அவ்வளவும் அந்தப் பகுதிக்கு என்பது பொருள் அல்ல.

ஹாஜி ம. மு. பீர் முஹம்மது : தஞ்சை மாவட்டத்தில் இருந்து நெல்லைக் கொள்முதல் செய்து பிற மாவட்டங்களுக்கு அனுப்பி அரைவை செய்வதைவிட அந்த மாவட்டத்திலேயே அரைவை செய்து அரிசியாக பிற இடங்களுக்கு அனுப்புவது என்றால் கொண்டு செல்லும் செலவும் குறையும். அரசினர் அப்படிச் செய்வார்களா?

மாண்புமிகு திரு ஏ. கோவிந்தசாமி . தஞ்சாவூரிலும் செய்யப்படுகிறது. திருவாரூரில் அந்த நிலை இருக்கிறது.

திரு. இரா. சௌந்தரராஜ மூப்பனர் : தஞ்சை மாவட்டத்தின் தேவைக்கே கூட இல்லாத அளவுக்கு வெளியே அதிகமாக எடுத்துப் போவதான பேச்சு உலவுகிறதே, அது உண்மையா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி : பேச்சு உலவுவதை நம்ப வேண்டாம். அதிகமான அளவு எடுத்துப் போகவில்லை. உபரியாக இருப்பதைத் தான் எடுத்துக்கொள்கிறோம். இன்னும் கொள்முதல் செய்ய முடியுமா என்பதற்கு வழிவகை சொன்னல் உதவியாக இருக்கும்.

திரு. கா. வேழவேந்தன் : செங்கல்பட்டு மாவட்டத்தில் நெல் விளைச்சல் சுமாராக இருந்தபோது தஞ்சை மாவட்டக் கொள்முதல் நெல்லை பற்றாக் குறை அளவுக்குக் கொண்டுவந்தபோது விலைவாசி குறைந்தது. இப்பொழுது வறட்சி மீதூர்ந்து இருக்கிற காரணத்தினால் செங்கல்பட்டு கொள் முதலை நிறுத்தி தஞ்சை மாவட்டத்தில் இருந்து—அங்குள்ளவர்களே கொள்முதல் செய்துவர அனுமதிப்பார்களா ?

மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி : செங்கல்பட்டுக்கு உரிய நெல் கண்டிப்பாக வந்துசேரும். 83 பைசா கோதுமையைக் கூட 75 பைசாவுக்குக் கொடுக்கிறோம். அதற்குமேல் சோளம், சிவப்பு கோதுமை கொடுக்கப்பட்டு வருகிறது.

மருத்துவமனைகள்

* 191 வின—திரு. பெ. மலைச்சாமி : மாண்புமிகு பொதுச் சுகாதார, அரிசன நல அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினவிற்கு விடையளிப்பாரா—

மேலூர் மருத்துவமனையை விரிவாக்குவதற்காக அதன் கிழக்குப் பக்கத்தில் உள்ள பள்ளி இடத்தை அரசு கையகப்படுத்துவதற்கான செயற்குறிப்பு ஏதேனும் உண்டா ?

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து : இவ்விஷயம் சுகாதாரக் குடும்பக் கட்டுப்பாடு இயக்குநர் அலுவலகத்தில் பரிசீலனையில் உள்ளது.

திரு பெ. மலைச்சாமி : தலைவர் அவர்களே, நோயாளிகளின் எண்ணிக்கை அதிகமாகிக்கொண்டு வருவதாலும், அங்கே தொழுநோய் பிரிவு ஒன்று இயங்கி வருவதாலும் தற்போதுள்ள இடம் போதாத காரணத்தினலும், இந்தப் பள்ளி இடத்தையும் எடுத்துக்கொள்ள அரசு முடிவு செய்யுமா ?

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து : இதனைச் செய்வதற்குத்தான் சர்க்கார் குறிப்பில் டி.எம்.ஓ. நடவடிக்கை எடுத்து வருவதாக இருக்கிறது.

TRUTH ALONE TRIUMPHS

திரு. சி. கோவிந்தராசன் : மாவட்டத் தலைமை மருத்துவ நிலையங்களில் கூட்டம் அதிகமாக இருக்கிறது. குறிப்பாக கடலூர் மருத்துவ மனையை எடுத்துக்கொண்டால் கண் சிகிச்சைப் பிரிவு கிடையாது. சென்னைக்குத்தான் வரவேண்டியிருக்கிறது. ஆகவே அங்கே க்ளுகோஸ் டாலரன்ஸ் டெஸ்டுக்கும், பதாலஜிகல் லாப்பரட்டரி ஏற்படுத்துவதற்கும்—கண் சிகிச்சைப் பிரிவு ஒன்றையும் ஏற்படுத்துவார்களா ?

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மூலக் கேள்வி மேலூர் மருத்துவ மனையைப் பற்றியது. அதைவிட்டு, அவரவர்கள் தங்கள் தங்கள் தொகுதி கேள்வியைக் கேட்பது முறை அல்ல.

திரு. எஸ். ஜே. ராமசாமி : அமைச்சர் அவர்கள் சொன்னதுபோல மேலூர் மருத்துவ மனையை விரிவுபடுத்த அதன் பக்கத்தில் உள்ள பள்ளிக் கட்டிடத்தை எடுத்துக்கொண்டால் பள்ளிக்கு என்ன செய்வது ?

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து : அதற்குத் தகுந்த ஏற்பாடு செய்யப்படும். பள்ளிக்கூடத்திற்கான இடம் போக பாக்கி இருக்கிற இடம் எடுத்துக்கொள்ளப்படும்.

திரு. கரு. சீமைச்சாமி : சார், அது அந்தப் பள்ளிக்கூடத்திற்கு விளையாட்டு கிரவுண்டாக இருக்கிறது. இதை நல்ல முறையிலே பரிசீலனை செய்யவேண்டும். ஆஸ்பத்திரியை விரிவுபடுத்துவதில் ஆட்சேபணையில்லை. அதற்கு வேண்டுமானால் புறம்போக்கு நிலங்கள் இருக்கின்றன அதைப் பயன்படுத்திக்கொள்ளலாம். எனவே இதை மறுபடியும் பரிசீலனை செய்வார்களா ?

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து : அதை விரிவாக்கவேண்டுமென்றால் அந்த மருத்துவ மனைக்கு அருகிலேதான் செய்ய வேண்டும். புறம்போக்கு நிலம் இருப்பதாலே வெகு தூரத்திலே செய்ய முடியாது. ஆகவே அந்தப் பள்ளியை ஒட்டிய இடத்திலேதான் செய்ய முடியும்.

திரு. கரு. சீமைச்சாமி : நாளைக்கு அந்தப் பள்ளிக்கூடம் விஸ்தரிக்கப் படக்கூடிய சூழ்நிலையையும் உத்தேசித்து மறுபடியும் பரிசீலனை செய்ய முன்வருவார்களா ?

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து : அந்தச் சூழ்நிலைகளைக் கருதித்தான் அரசாங்கம் ஏற்பாடு செய்திருக்கிறது.

திரு. இல. பலராமன் : பள்ளிக்கூடத்திற்கு அருகாமையில் மருத்துவ மனை வைக்கப்படுவதால் தொத்து வியாதியஸ்தர்கள் மூலமாக வியாதி பரவிவிடும். எனவே பள்ளிக்கூடமும் ஆஸ்பத்திரியும் அருகாமையில் இருப்பது நல்லதா ? அந்த நிலையைப் போக்க அரசாங்கம் நடவடிக்கை எடுக்குமா ?

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து : இது வேறுபட்ட கேள்வி. மருத்துவ மனையும் பள்ளிக்கூடமும் ஒன்றாக வைக்கலாமா வேண்டாமா என்பதை நல்ல முறையிலே பரிசீலனை செய்துதான் ஏற்பாடு செய்கிறோம். இதையெல்லாம் சுகாதார இலாகா ஆராய்ந்துதான் முடிவு எடுக்கப்படுகிறது.

* 192 வினா—**திரு. சு. துரைசாமி :** மாண்புமிகு பொதுச் சுகாதார, அரிசன நல அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா—

கோவை தலைமை மருத்துவ மனையில் குழந்தைகளுக்கு என ஒதுக்கப்பட்டுள்ள படுக்கைகளை அதிகமாக்கும் உத்தேசம் ஏதேனும் உண்டா ?

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து : இல்லை.